# பாற்கடல் அலை மேலே

ராகமாலிகை

ஆதி தாளம்

ராகம் ஷண்முகப்ரியா

*பாற்கடல் அலை மேலே பாம்பணையின் மேலே*
*பள்ளி கொண்டாய் ரங்கனாதா – உந்தன்*
*பதமலர் நிழல் தேடி பரவசமோடு பாடி*
*கதி பெறவே ஞானம் நீ தான் தேவா*

ராகம் கேதாரகௌளை

*காதகனான ஒரு சோமுகன் கைகொண்டு*
*கடலிடையே ஒளித்த மறை நான்கும் பின்னர்*
*மேதினி தான் மீள காதகன் தான் மாள*
*மீனவதாரம் கொண்ட திருமாலே*

ராகம் சாமா

*வானவரும் தானவரும் ஆழி அமுதம் கடைய*
*மந்தர கிரி தன்னை தாங்கிடவே ஒரு*
*கூனுடைய ஓடு கொண்ட கூர்மாவதாரம் என்னும்*
*கோலமுற்றாய் புகழ் ஓங்கிடவே*

ராகம் அடாணா

*ஈணன் இரண்யாக்ஷன் எனும் படுபவி*
*பாயாய் எழுகடல் உள் மறைத்த பூதேவி*
*தீனரக்ஷகா ஸகல ஜீவ ரக்ஷகா எனவே*
*மானிலத்தைத் தூக்கிய வராஹ வடிவானவரே*

ராகம் மோஹனம்

*எங்கிருக்கிறான் ஹரி எங்கிருக்கிறான் அவன்*
*(எங்கிருக்கிறான் என்று சொல்லடா) என்று*
*இரணியன் சொல்லை இடை மறித்தே அவன் பிள்ளை*
*அந்த தூணில் இருப்பான்*
*என இயம்பியதால் நேற்ந்த தொல்லை நீங்கவும்*
*பொங்கு சின வம்பனது பூதல் உடலும் தசை நின்றெழுந்த*
*தொந்தியோடு மணிக் குடலும் உதிரம் சிந்தவே*
*நகம் கொண்டு கீறும் நரஸிம்ஹ அவதாரனே*
*சங்கு சக்கிர தாரனே உபகாரனே அவதாரனே*

ராகம் பிலஹரி

*மூவடி மண் கேட்டு வந்து மண்ணளந்து விண்ணளந்து*
*மாவலி சிர மளந்த வாமனனே*
*தந்தை ஆவியைப் பிரித்ததனால் ஸூர்யகுல வைரியென*
*அமைந்த பரசுராமன் ஆனவனே*

ராகம் கானடா

*தேவர்களை சிறை மீட்டு ராவணாதி உயிற் மாய்த்த*
*தசரத ஸ்ரீ ராம அவதாரனே*
*பூவுலகில் உழவோர் புகழும் கலப்பை தன்னை*
*புஜம் தன்னில் தங்கி நின்ற பலராமனே*

ராகம் காபி

*ஆவணி ரோஹிணியில் அஷ்டமியிலே*
*அர்த்த ஜாம நேரத்லே அவதரித்தானே*
*ஆயற் பாடி மேவிய யசோதை நந்தலாலா*
*பதினாயிரம் கோபியர் பரமாநந்த லோலா*
*பூபாரம் தீர்க்க பாரதப் போர் முடித்த சீலா*
*கோபால கிருஷ்ண லீலா ஆதிமூலா பரிபால*

ராகம் ரஞ்சனி (விஜயநாகரி)

*பஞ்ச பாதகன் வாதுடன் கொடிய வஞ்சகன்*
*மித்திரபேதகம் செய்ய அஞ்சிடாதவன்*
*ஆடிடும் நாடக மேடையேறிய கலியுகம் அழிக்கவே*
*தர்மம் தழைக்கவே அன்பு கொண்ட கல்கி அவதாரன்*
*சிங்காரன் தசாவதாரன் நீயே (பாற்கடல்)*

✠✠✠✠✠✠✠✠✠✠